𑌸𑌕𑌳𑌾𑌧𑌿𑌕𑌾𑌰𑌃

ஸகளாதிகாரம்

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்

தஞ்சாவூர்.

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண் - 92

|| 𑌸𑌕𑌲𑌾𑌧𑌿𑌕𑌾𑌰𑌃 ||

(𑌅𑌗𑌸𑍍𑌤𑍍𑌯𑌮𑍁𑌨𑌿𑌪𑍍𑌰𑌣𑍀𑌤𑌃)

அகஸ்திய மகரிஷி அருளிய

ஸகளாதிகாரம்

பதிப்பாசிரியர்

கே. வாசுதேவ சாஸ்திரி, B.A.,

முன்னாள் சமஸ்கிருத பண்டிதர்

சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

தஞ்சாவூர் மஹாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்,

தஞ்சாவூர்.

2006 விலை ரூ.

Bibliographical Data

Title of the Book	:	**SAKALADHIKARAM**
Editor	:	**K. Vasudeva Sastry, B.A.,**
Publisher	:	Director Sarasvati Mahal Library.
Publication No.	:	92
Language	:	Sanskrit & Tamil
Edition	:	Edition
Date of Publication	:	July, 2006
Paper Used	:	18.6 Kg. Seshasayee
Size of Book	:	21 x 14 cm.
Printing and Type Used	:	16 pt. & 11 pt.
Number of Pages	:	216s
Price	:	**Rs.**
Printer	:	Sarma's Sanatorium Press Pudukkottai.
Binding	:	Stiff Binding
Subject	:	Silpasastra

வெளியீட்டாளர் முகவுரை

பண்டிட் ஜவகர்லால் நேரு அவர்கள் தனது "*இந்தியாவைக் கண்டுகொண்டேன்*" (Discovery of India) எனும் நூலில் இந்தியா சமூகம், பண்பாடு, ஓவியம், சிற்பம் போன்றவற்றால் வேற்றுமையில் காணும் ஒற்றுமையை வியந்து பாராட்டுகிறார்.

குறிப்பாக தமிழ்நாடு கலைகளின் பிறப்பிடம். சிற்பக்கலை செழித்து வளர்ந்து, வாழ்ந்த - வாழும் இடம். இவை நம் தமிழ்ச் சமுதாயத்தின் உயர் இலட்சிய வாழ்வை - பண்பாட்டு உச்சத்தை - கலை நுண் ஆழத்தைப் புலப்படுத்துவன.

எத்துணைத் தத்துவ ஞானம் தழைத்த மெய்யுணர்வினரும் உருவ அல்லது படிம வழிபாட்டை உவந்து பாராட்டி வருவது மரபு. "சித்திரத்தில் அலர்ந்த செந்தாமரையை"ப் போற்றி மகிழும் கம்பன்போல் இறைவன் அடியவர்கள் கடவுளினும் அவன் உருவத்தை - மூர்த்தியைப் பாடிப் பரவி காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி உணர்ந்து உவப்பர்.

சிற்ப சாத்திரத்தில் அறுவகை மரபுகள் உண்டென்று கூறப்படுகின்றன. அவையாவன,

1. விச்வகர்ம மதம்,
2. விச்வம்பர மதம்
3. பிங்கள மதம்
4. உத்பவ மதம்
5. மயமதம்
6. பரிமள மதம்

இச்சிற்ப நூல்கள் மரபுவழி விச்வகர்மா தேவர்களின் சிற்பி எனவும், மயன் அசுரர்களின் சிற்பி எனவும் கூறப்படுகிறது. மிதிலையில் இராமன் திருமணம் நடந்த திருமண மண்டபம்,

"மயன் முதல் திருத்திய மணிசெய் மண்டபம்
அயன் முதல் திருத்திய அண்டமும் ஒத்த"தாகக்

கம்பர் பாடுகிறார்.

உருமானங்களைப் பற்றி மட்டுமே எடுத்தியம்பும் நூல்கள் உள்ளன. அவற்றுள் ப்ராம்மீய சித்ரகர்ம சாத்திரம், ஸாரஸ்வதீய சித்ரகர்ம சாத்திரம், சகலாதிகாரம், சித்ராகஸ்தியம் என்பன குறிப்பிடத்தக்கவை. முதல் இரண்டு நூல்களும் முறையே வைணவ படிமங்களைப் பற்றியும், சைவ படிமங்களைப் பற்றியும் கூறுகின்றன. சகலாதிகாரமும், சித்ராகஸ்தியமும் முறையே சைவ-வைணவ படிமங்களைப் பற்றிக் கூறுகின்றன.

இந்த வெளியீட்டில் முதல் 50 சுலோகங்களுக்கு மூலச் சுவடியிலேயே தமிழ் உரை காணப்பட்டது. அதுவும் இதில் சேர்க்கப்பட்டிருக்கிறது. முதற்பதிப்பு திரு. கே. வாசுதேவ சாஸ்திரி அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்டு 1961 இல் இந்நூலகம் வெளியிட்டது. தற்பொழுது மூன்றாம் பதிப்பாக வெளிவருகிறது. இந்த வெளியீடு ஸ்தபதிகளுக்கும், பொதுவாகக் கலை ஆர்வலர்களுக்கும் பயனாக இருக்கும் என நம்பப்படுகிறது.

இந்நூல் வெளிவர நிதியுதவி நல்கிய நடுவண் அரசுக்கும், நிருவாக அலுவலர் திரு. சாமி. சிவஞானம் அவர்களுக்கும், முன்னாள் வெளியீட்டு மேலாளர் திரு. எம். பாலசுப்ரமணியன் அவர்களுக்கும், இந்நூல் நல்லமுறையில் அச்சில் வெளிவரக் காரணமான புதுக்கோட்டை சர்மாஸ் சானடோரியம் அச்சகத்தாருக்கும் என் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சா. விஜயராஜ் குமார், இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்
இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்
18-7-2006

PREFACE

This publication of 'Sakalādhikāra' is the 4th in the series of Manuscripts on Sculpture edited and published by this Library with the aid of Government Grant. The title of the work means 'a treatise on Deities with form'. This deals with Śaivite images and is attributed to Agasthya. Its counter - part on Vaiṣnava images by the same author is 'Chitrāgastya' a copy of which was recently obtained from the Oriental Library, Trivandrum. It is expected that this work on Vaiṣnava images may be included in subsequent series.

The texts of Agastya, Kāśyapa and Viśvakarma are the ones usually followed in Sculpture in South India. Kāśyapa's text has already been published with translation by this library and Viśvakarma's text is being edited. Two other texts which are fuller than these and found only in this library, dealing with Śaivite and Vaiṣnavite images, are in the form of a discourse by Lord Śiva to Śri Pārvati and Lord Viṣnu to Lord Brahma, and were published with translation under the titles 'Sārasvatīya Chitrakarma Śāstra' and 'Brāhmīya Chitrakarma Śāstra' respectively. The text relating to Śilpa Śāstra in general and to Sculpture in particular abound in errors and lacunae and the present text is not an exception to the general

rule. Sri K. Vāsudēva Sāstri, retired Research Pandit of this Library, who has ably edited many works on several subjects, has done an admirable job of this work. Our thanks are due to him for his valuable services.

Our thanks are due to the Government of Madras for their timely grants that have enabled the publication of this and other valuable works available in this Library.

TANJORE
27—8—'61.

S. GOPALAN,
Honorary Secretary,
T. M. S. S. M. Library Committee.

INTRODUCTION.

The art of Shilpa is a comprehensive one. It includes Architecture, Sculpture, Painting and Craftsmanship. The most ancient treatise on this subject is a branch or Upāṅga Vēda of Yajur Vēda. Though this ancient text is not available to-day, the number of chapters and the contents of each chapter of all the ancient texts on all the subjects including Shilpa are preserved for us in a rare manuscript called Yāmalāṣṭakam preserved in the Saraswathi Mahāl Library, Tanjore. In describing the contents of the chapters of Shilpa, the subject is divided into two parts, Pūrvāṅga and Uttarāṅga, dealing respectively with objects for 'physical' and 'mental' enjoyments.

The Pūrvāṅga has 9 chapters dealing with :—

1. The Universe including the abodes of celestials and human beings.

2. The several parts of the Universe.

3. The cities of Agni, Yama and other Lords of the quarters.

4. The construction of ramparts, storeyed palaces and mansions.

5. Very high and very majestic groups of storeyed buildings.

6. The construction of vehicles and curious means of transports.

7. Air-chariots of Siddhas and Gandharvas and Vidyādharas of large proportions.

8. Construction of Ships.

9. The units of measurement.

The second part consists of 11 chapters and deals with :—

1. Ornaments of various descriptions such as crowns and coronets and bracelets.

2. Six kinds of ear ornaments and other kinds of ornaments to be worn in other parts of the body.

3. The making of ornaments of Dēvas and Dānavas Gandharvas and celestial damsels.

4. The production of Gold.

5. Gems, their examination and their weights.

6. The smelting and purification of metallic ores.

7. Boring of gems.

8. The art of brightening of gems in all its fullness.

9. The weights Gunja, Karṣa and Kalanja etc. for weighing gold and gems.

10. The making of all kinds of weapons and cutlery.

11. The proper proportions making for auspiciousness.

Six Schools of Shilpa are mentioned, namely the Schools of (1) Vis'wakarma (2) Vis'vambhara (3) Piṅgala (4) Utpala (5) Maya and (6) Parimala.

In Purāṇas, Āgamas and other works on Shilpa the original authorities on Silpa are given in varying numbers as 18, 32 and 81 etc.

The most popular of these are the treatises of Maya and Vis'wakarma, the architects of Asuras and Dēvas respectively. The treatise of Maya is available in a single book named Maya Matam. But Vis'wakarma's work is found scattered in a number of workman's manuals, some in print and others in manuscripts. Vis'wakarma Vāstu Sāstram, the biggest of these manuals dealing with planning of cities and the architecture of buildings has already been published by this library.

Of the other original authorities the most popular ones are Kās'yapa Silpam and Mānasāram. Both these works deal with every branch of Silpa. They have been published some years ago, but the text abounds in errors and lacunae. The other original authorities now available to us dealing with all the aspects of S'ilpa are Aindram, Nārada Silpam and Aparājita Pṛcchā. We have comprehensive latter day compilations of the 10th and 13th century in Bhoja's Samarāngaṇa Sūtradhāra and Kumāra's S'ilpa Ratna. We have also a number of works by Maṇḍana.

Besides these, there are a number of works dealing with sculpture alone. They are Brāhmīya Citra karma Sāstram, Sāraswatīya Citrakarma Sāstram, Sakalādhikāram and Chitrā Āgastyam. The first is said to have been addressed by Mahaviṣṇu to Bṛahma, the second by Bṛhma to Saraswaṭi Dēvi. The third

and the fourth are said to have been the works of Sage Agastya. The first and second are complimentary to each other, the former dealing with Vaiṣṇavite images and the latter with the S'aivite images. Similarly the third and the fourth deal with S'aivite and Vaiṣṇavite images respectively. The first two have recently been published by this library with translation in Tamil. The third is the present work. A manuscript of the fourth is available in the Trivandrum Library.

In these works on Sculpture the general arrangement of the subject matter is practically the same.

This work first deals with the proportion of the height of the images to those of the temple, and the units of measurements. The proportions of the several features of the body are then detailed with standard heights as reference. These standard heights are different for different classes of images and they are classified into ten main heights beginning with one span to ten spans. This system is called Tāla māna or Measurement by spans. A Tala or span is divided into 12 aṅgulas and each aṅgula is therefore ¾ of an inch in present day use. The aṅgula is divided into 8 yavas. The measurements of the features are of four kinds (1) vertical (2) breadthwise (3) thicknesswise and (4) dealing with interspaces. Hundreds of measurements are given for each image.

The text then deals with the selection of materials of which the images are made, Wood, Granite, Cement, gems, ores and metals of which copper, bronze, brass, silver and gold are sanctioned. The

process of making mettallic images is not detailed in these works. The moulding process of making mettalic images is contained in a work called 'Madhūccişṭa Pratiṣṭhā Vidhi' which is available in Oriental Manuscripts Library, Madras. Special details are however given for images of cement. The skeleton called 'Sūla' over which the plastering has to be made is generally of wood and is described in great detail. Over the wooden skeleton is wound the string or Rajju corresponding to the Nādis of the body. This process is called Rajju Bandhana. Over this is made the plastering. The plastering and the preparation of its materials are also given in detail. The painting over the images is next dealt with. The colours used for painting are mainly four white, yellow, blue and red and each is subdivided into 4 shades. These 16 colours are represented by minerals and other stable inorganic compounds not easily affected by atmosphere.

The last chapter deals with the ceremony of opening of the eye of the image.

The manuscript of the present work is available only in this Library and Oriental Manuscripts Library, Madras. As is generally the case with the Silpa Manuscripts the text is badly mutilated and the construction has had to be made with the help of parallel works and in some places purely by conjecture. These manuscripts are being edited, translated and published for the firrt time and the discovery of other copies of Manuscripts may help to improve the text.

It is hoped that this text may be found useful to the Sthapatis and the general readers alike.

Tanjore.
20—4—1961.

K. VĀSUDEVA SĀSTRI.

முகவுரை.

சிற்பக்கலை என்பது ஒன்றோடொன்று சம்பந்தப்பட்ட பலகலைகள் சேர்ந்தது. அதில் கட்டடக்கலை, உருமானம் செய்தல், சித்திரம் வரைதல், வேலைப்பாடுள்ளதும் தினசரி உபயோகத்திற்கு வேண்டியதுமான சாமான்கள் செய்தல், இவை யாவும் அடங்கும். நம் நாட்டில் இக்கலையைப் பற்றிய மிகப்புராதன நூல் யஜுர் வேதத்தின் பிரிவாகிய உபாங்கவேதம் ஆகும். இந்த நூல் அதன் முழு உருவத்தில் தற்காலம் நமக்குக் கிடைக்கவில்லையாயினும், வேதங்கள், உபவேதங்கள், புராணங்கள் முதலியவற்றில் உள்ள அத்தியாயங்களின் எண்ணிக்கையும், ஒவ்வொரு அத்தியாயத்திலுமுள்ள விஷயங்களின் சுருக்கமும் 'யாமளாஷ்டகம்' என்னும் ஓர் பழைய நூலில் தஞ்சை ஸரஸ்வதி மகாலில் நமக்குக் கிடைக்கிறது.

இதில் சில்பத்தைப்பற்றிய நூல் இரண்டு பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. முதல் பாகமாகிய பூர்வாங்கத்தில் நமது சரீர சௌக்கியத்திற்கு வேண்டிய கட்டடம் முதலியவற்றின் நிர்மாணம் கூறப்படுகிறது. இரண்டாவது பகுதியாகிய உத்தராங்கம் நமது மனத்தின் உற்சாகத்திற்காக உபயோகப்படுத்தும் ஆபரணம் முதலியவை செய்யும் முறையை விவரிக்கிறது. பூர்வாங்கத்தில் 9 அத்தியாயங்கள் இருக்கின்றன. அவைகளில் உள்ள விஷயங்கள் வருமாறு:—

1. மானிடர்கள் தேவர்கள் முதலிய யாவரும் வசிக்கும் இந்த உலகத்தின் வர்ணனை.

2. உலகத்தின் பல பகுதிகள்.

3. அக்னி, யமன் முதலிய திக்பாலர்களின் நகரங்கள்.

4. ப்ராகாரங்கள், உப்பரிகைகள், அரண்மனைகள், மாளிகைகள், தேவாலயங்கள் முதலியவற்றின் நிர்மாணம்.

5. மிகவும் உயரமாகவும் கம்பீரமாகவும் அமைக்கப்படும் கட்டட வரிசைகளின் அமைப்பு.

6. சாதாரண ஊர்திகள், விசித்திரமான ஊர்திகள்.

7. விசாலமான ஆகாய விமானங்கள், சிறப்பாக சித்தர்கள், வித்யாதரர்கள், கந்தர்வர்களின் விமானங்கள் ஆகியவற்றின் நிர்மாணம்.

8 கப்பல் கட்டும் முறை

9. அளவு முறைகள்

உத்தராங்கம் 11 அத்தியாயங்கள் கொண்டது. அவைகளிலுள்ள விஷயங்கள் வருமாறு:—

1. கிரீடங்கள், கடகங்கள் முதலிய விசேஷ ஆபரணங்களின் அமைப்பு.

2 ஆறுவகைக் குண்டலங்களும் மற்ற அணிகளும் அமைக்கும் வகை.

3. தேவர்கள், அசுரர்கள், கந்தர்வர்கள், அப்ஸரஸ்ஸுகள், முதலியவர்கள் அணியும் ஆபரணங்களை அமைக்கும் முறை.

4. தங்கம் உற்பத்தி செய்யும் முறை

5. நவரத்தினங்களைப் பரீக்ஷிக்கும் முறையும் அவற்றை எடைபோடும் முறையும்.

6. தாதுக்களினின்றும் உலோகங்களைப் பிரித்துச் சுத்திகரிக்கும் முறை.

7. ரத்தினங்களைத் துளையிடுதல்

8. ரத்னங்களைத் தேய்த்துப் பட்டைதீர்த்துப் பிரகாசமுண்டாக்கும் முறை.

9. தங்கம் முதலியவைகளை நிறுப்பதற்கான குஞ்சம் (குன்றுமணி) கர்ஷம் (வராகனெடை) களஞ்சம் (கழஞ்சு) முதலிய எடைகள்.

10. ஆயுதங்களும், சஸ்திரங்களும் செய்யும் முறை

11. அளவுகளும், ஆயாதி அல்லது அவற்றை சுபம் உண்டாக்கும் முறையில் அமைக்கும் விதிகளும்.

இதில் சில்பசாஸ்திரத்தில் 6 வகை சம்பிரதாயங்கள் உண்டென்று கூறப்படுகின்றது. அவை வருமாறு;—

1. விச்வகர்மமதம் 2. விச்வம்பரமதம் 3. பிங்கள மதம் 4. உத்பலமதம் 5. மயமதம் 6. பரிமளமதம்

புராணங்களிலும், ஆகமங்களிலும் ஏனைய சிற்ப சாஸ்திரங்களிலும், சிற்பத்தைப் பற்றிய நூலாசிரியர்கள் 18 என்றும், 32 என்றும், 81 என்றும் இன்னும் பலவகை யாகவும் பெயர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

இவர்களில் விச்வகர்மா, மயன் இவ்விருவருமே முக்கியமானவர்கள். விச்வகர்மா தேவர்களின் சிற்பி. மயன் அசுரர்களின் சிற்பி. மயமதம் முற்றிலும் ஒரே நூலாக இப்பொழுதும் கிடைக்கிறது. ஆனால் விசுவகர்மா வினுடைய நூல் பல பகுதிகளாகவே அந்தந்தப்பகுதிச் சிற்பத்தொழிலாளிக்கென்றே தனியாகத்தொகுக்கப்பட்டுப் பல நூல்களாக நமக்குக் கிடைக்கிறது. அவற்றுள், கிராமங்கள், நகரங்கள் கட்டடங்கள் இவைகளைப்பற்றிய விரிவான பகுதி "விச்வகர்மவாஸ்து சாஸ்திரம்" என்ற பெயரால் இந்த நூல் நிலையத்தாரால் சில வருஷங்களுக்கு முன் வெளியிடப்பட்டுள்ளது. மற்ற பகுதிகள் இரண்டொன்று அச்சிலும் சில சுவடிகளாகவும் கிடைக்கின்றன.

சிற்பக்கலையைப்பற்றிய மற்ற ஆசிரியர்களின் நூல்களுள் முக்கியமானவை காசியப சில்பமும், மானஸாரமும், ஆகும். இவ்விரண்டு நூல்களிலும் சிற்பக்கலையின் எல்லாப் பகுதிகளும் இடம் பெற்றிருக்கின்றன. இவ்விரண்டு நூல்களும் பல வருஷங்களுக்கு முன் அச்சிடப்பட்டுள்ள போதிலும் பிழை மலிந்திருக்கின்றன. இவ்விரண்டைத் தவிர தற்காலத்தில் சிற்பத்தின் எல்லாப் பகுதிகளும் அடங்கிய நூல்கள் நமக்கு இப்பொழுது கிடைக்கக்கூடிய முதல் நூல்கள் ஐந்த்ரம், நாரதசில்பம், அபராஜிதப்ருச்சா இவைகளே. பிற்காலத்திய தொகுப்பு நூல்கள் போஜ மகாராஜா இயற்றிய ஸமராங்கண ஸூத்ரதாரமும் குமாரர் இயற்றிய சில்பரத்னமும், மண்டனர் எழுதிய சிற்பநூலகளும் ஆகும். இவையன்றி வாயுபுராணம் முதலிய புராணங்களிலும் சைவ வைஷ்ணவ ஆகமங்களிலும 'ப்ருஹதஸம்ஹிதை' போன்ற பலவகைத்தொகுதி நூல்களிலும் அர்த்தசாஸ்திரங்களிலும் சிற்பத்தைப் பற்றிய பகுதிகள் அடங்கியிருக்கின றன.

இவைகளைத்தவிர உருமானங்களைப்பற்றி மட்டும் உள்ள சில நூல்கள் இருக்கின்றன. அவற்றுள் முக்கியமானவை 'ப்ராம்மீயசித்ரகர்ம சாஸ்திரம்', ஸாரஸவதீய சித்ரகர்ம சாஸ்திரம, ஸகலாதிகாரம, சித்ராகஸ்தியம் எனபன. முதல் இரண்டு நூல்களும் முறையே வைஷ்ணவ ப்ரதிமைகளைப்பற்றியும், சைவ ப்ரதிமைகளைப்பற்றியும் கூறுகின்றன. இவ்விதமே ஸகலாதிகாரமும், சித்ராகஸ்தியமும் முறையே சைவ வைஷ்ணவ ப்ரதிமைகளைப் பற்றிக் கூறுகின்றன. முதல்நூல் விஷ்ணுவால் பிரும்மாவுக்கு உபதேசிக்கப்பட்டதாகவும், இரண்டாவது நூல் ப்ரும்மாவினுல் ஸரஸ்வதிதேவிக்கு உபதேசிக்கப்பட்டதாகவும் மற்ற இரண்டு நூல்களும் அகஸ்திய முனிவரால் இயற்றப்பட்டதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. முதல் இரண்டு நூல்களும் தமிழ் மொழி பெயர்ப்புடன் இந்நூல்

நிலையத்தாரால் வெளியிடப்பட்டுள்ளன. மூன்றாவது நூல் இந்த வெளியீடு. சித்ரகாஸ்தியம் என்னும் நூல் திருவனந்தபுரம் நூல் நிலையத்தில் கிடைக்கிறது. இந்த ப்ரதிமைகளைப்பற்றிய நூல்களில் அடங்கிய விஷயங்கள் அநேகமாக ஒரேமாதிரியாக இருக்கின்றன.

முதலில் தேவாலயம், கர்ப்பகிருஹம் இவற்றின் அளவுக்குப் பொருத்தமாகப் பிம்பங்களின் உயரத்தை நிர்ணயிக்கும் முறைகளும் அளவை அலகுகளும் சொல்லப் பட்டிருக்கின்றன. பிம்பங்களின் அங்கங்களின் அளவுகள் பிறகு கொடுக்கப்பட்டிருக்கின்றன. பிம்பங்களைப் பல வகைகளாகப்பிரித்து ஒவ்வொன்றுக்கும் உரியது என ஓர் உயரத்தை ஏற்படுத்தி அந்த உயரத்தின் விகிதங்களாக அங்கங்களின் அளவுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன இந்த உயரங்கள் 10 சாண் முதல் 1 சாண் வரையில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்த முறைக்குத் 'தாள மானம்' என்று பெயர். 'தாளம்' என்பதற்குச் 'சாண்' என்பது பொருள். ஒரு தாளத்தை 12 அங்குலங்களாக்ப் பிரித்திருக்கிறார்கள். இந்த அங்குலம் இப்பொழுது நடை முறையிலுள்ள அங்குலத்தின் ¾ பங்காகும். ஒரு அங்குலத்தை 8 யவைகளாகப்பிரித்திருக்கிறார்கள். பிம்பத் திற்காகக் கொடுக்கப்பட்டிருக்கும் அளவுகள் நால்வகை. செங்குத்தளவுகள், அகல அளவுகள், கன அளவுகள் அங்கங்களின் இடைவெளிகள். இவ்விதமாக ஒவ்வொரு பிம்பத்திற்கும் நூற்றுக்கணக்கான அளவுகள் ஏற்பட் டிருக்கின்றன. பிம்பங்களின் அளவுகளைச் சொன்னபிறகு பிம்பங்களைச் செய்வதற்கான மூலப்பொருள்களைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. மரம், கருங்கல், சுதை என்னும் சுண்ணும்புக்கலவை, உலோகதாதுக்கள், ரத்தினங்கள், பொன், வெள்ளி, செம்பு, பித்தளை, வெண்கலம், ஆகிய உலோகங்கள் விக்ரகங்களுக்கு ஏற்றதாகச் சொல்லப்பட் டிருக்கின்றன. உலோகங்களில் விக்ரகங்களை வார்க்கும்

முறை இந்த நூல்களில் சொல்லப்படவில்லை. 'மதூச்சிஷ்ட ப்ரதிஷ்டாவிதி' அல்லது மெழுகு கட்டி வேலை செய்யும் முறை என்ற நூலில் இந்த விவரம் காணப்படுகிறது. இந்த நூல் மதராஸ் கீழ்த்திசை நூல் நிலையத்தில் இருக்கிறது. இதன் விவரமும் இன்னும் சிற்பக்கலையின் பல நுணுக்கங்களும் அக்கலையில் இப்பொழுது ஈடுபட்டுள்ள சிற்பிகளிடமிருந்தே நாம் தெரிந்துகொள்ளவேண்டும்.

ஆனால் சுதையில் பிம்பம் செய்யும் முறை இந்த நூல்களில் வெகு விரிவாகக்கொடுக்கப்பட்டிருக்கிறது. முதலில் மரம் முதலிய மூலப்பொருளால் 'சூலம்' என்ற உள்கூடு செய்யப்படவேண்டும். அதன் பேரில் நாடிகளின் ஸ்தானத்தில் ரஜ்ஜுபந்தனம் என்னும் கயிறு சுற்றுதலும் செய்யவேண்டும். அதன்மீது மண், சுக்கான் முதலியவை சேர்ந்த கலவையைப் பூசவேண்டும். அதன்மீது வர்ண வேலைப்பாடுகள் செய்யப்படவேண்டும். நமது சிற்ப சாஸ்திரங்களில் வர்ணங்கள் முக்கியமாக நான்கு எனச் சொல்லப்பட்டிருக்கிறது. அவை வெள்ளை, மஞ்சள், நீலம், சிவப்பு. ஒவ்வொன்றிலும் 4 வகைகள். இந்த 16 வர்ணங்களையும் அவற்றிற்குரிய தாதுப்பொருளாலேயே குறிப்பிட்டிருக்கிறார்கள். வர்ணங்கள் தாதுப்பொருளாயிருப்பதால் அவை காற்று சீதோஷ்ணம் முதலியவைகளால் பாதிக்கப்படாமலிருக்கின்றன. கடைசியாக அக்ஷிமோக்ஷணம் என்னும் பிம்பத்திற்குக் கண்திறக்கும் முறை சொல்லப்பட்டிருக்கிறது.

இப்பொழுது வெளியிடப்படும் ஸகளாதிகாரத்தின் சுவடி இந்த நூல் நிலையத்திலும் மதராஸ் கீழ்த்திசை நூல் நிலையத்திலுமே கிடைக்கிறது. பொதுவாகச் சிற்பநூல்கள் எல்லாவற்றிலும் உள்ள ஓர் பெரிய குறை, அதாவது நூலின் மூலபாடம் பல இடங்களில் சிதைவுற்றிருப்பது இந்நூலிலும் காணப்படுகிறது. சிதைந்த பகுதிகள் இதைப்

போன்ற மற்ற நூல்களைக்கொண்டு திருத்தப்பட்டிருக்கின்றன. சில இடங்களில் இந்த உதவியும் இல்லாமல் யுக்தியினாலேயே திருத்தங்கள் செய்யவேண்டியிருந்தது.

இப்பொழுது வெளியாகும் சிற்ப நூல்கள் முதல் முறையாக இப்பொழுதுதான் வெளியிடப்படுகின்றன. இந்த நூல்களின் சுவடிகள் இன்னும் வேறு இடங்களில் கிடைக்குமானால் அவற்றைக்கொண்டு மூலபாடத்தை இன்னும் சீர்திருத்தலாம்.

இந்த வெளியீட்டில் முதல் 50 ச்லோகங்களுக்கு மூலச் சுவடியிலேயே தமிழ் உரை காணப்பட்டது. அதுவும் இதில் சேர்க்கப்பட்டிருக்கிறது. இந்த வெளியீடு ஸ்தபதிகளுக்கும், பொதுவாகக்கலையில் சிரத்தையுள்ளவர்களுக்கும் உபயோகமாக இருக்கும் என நம்புவோமாக.

20—4—1961. **கே. வாஸுதேவ சாஸ்திரி,**
தஞ்சாவூர்.

|| விஷயஸூசீ ||

பொருளடக்கம்

— o —

அத்யாய:	விஷய:	பத்ரம்
அத்யாயம்	பொருள்	பக்கம்
1	தாலமானப்ரமாணஸ்ய பேதா:	1—20
	அளவுகளின் வகை	,,
2	உத்தமதசதால:	20—40
	உத்தம தசதாளம்	,,
3	மத்யமதசதாலே ஸ்த்ரீமானம்	40—45
	மத்யம தசதாளத்தில் ஸ்த்ரீமாநம்	,,
4	மத்யமதசதாலே புருஷமானம்	45—54
	மத்யம தசதாளத்தில் புருஷமாநம்	,,
5	அதமதசதாலே ஸ்த்ரீமானம்	54—60
	அதம தசதாளத்தில் ஸ்த்ரீமாநம்	,,
6	ஸோமாஸ்கந்தலக்ஷணம்	60—72
	ஸோமாஸ்கந்த லக்ஷணம்	,,
7	சந்த்ரசேகரலக்ஷணம்	72—79
	சந்திரசேகர லக்ஷணம்	,,
8	வ்ருஷவாஹனலக்ஷணம்	79—82
	விருஷபவாஹந லக்ஷணம்	,,
9	நடேச்வரலக்ஷணம்	83—88
	நடேச்வர லக்ஷணம்	,,
10	கங்காதரலக்ஷணம்	90—92
	கங்காதர லக்ஷணம்	,,
,,	த்ரிபுராந்தகலக்ஷணம்	92—96
	த்ரிபுராந்தக லக்ஷணம்	,,
11	கல்யாணஸுந்தரலக்ஷணம்	96—98
	கல்யாண ஸுந்தர லக்ஷணம்	,,
12	அர்த்தநாரீச்வரலக்ஷணம்	99—100
	அர்த்தநாரீச்வர லக்ஷணம்	,,
13	பாசுபதமூர்த்திலக்ஷணம்	101—102
	பாசுபதமூர்த்தி லக்ஷணம்	,,

13	𑌕𑌂𑌕𑌾𑌲𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌂	102—104
	கங்காளமூர்த்தி லக்ஷணம்	,,
14	𑌹𑌰𑌿𑌹𑌰𑌾𑌰𑍍𑌧𑌲𑌕𑍍𑌷𑌣𑌂	104—105
	ஹரிஹரார்த்த லக்ஷணம்	,,
,,	𑌭𑌿𑌕𑍍𑌷𑌾𑌟𑌨𑌲𑌕𑍍𑌷𑌣𑌂	105—106
	பிக்ஷாடந லக்ஷணம்	,,
15	𑌚𑌂𑌡𑍇𑌶𑍍𑌵𑌰𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌲𑌕𑍍𑌷𑌣𑌂	107
	சண்டேச்வரப்ரஸாத லக்ஷணம்	,,
16	𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌂	107—110
	தக்ஷிணாமூர்த்தி லக்ஷணம்	,,
17	𑌕𑌾𑌲𑌦𑌹𑌨𑌲𑌕𑍍𑌷𑌣𑌂	111—113
	காலதஹந லக்ஷணம்	,,
18	𑌲𑌿𑌂𑌗𑍋𑌦𑍍𑌭𑌵𑌲𑌕𑍍𑌷𑌣𑌂	114—115
	லிங்கோத்பவ லக்ஷணம்	,,
19	𑌦𑌾𑌰𑍁𑌸𑌂𑌗𑍍𑌰𑌹𑌣𑌂	116—120
	தாரு ஸங்க்ரஹணம்	,,
,,	𑌶𑍂𑌲𑌲𑌕𑍍𑌷𑌣𑌂	120—127
	சூலலக்ஷணம்	,,
20	𑌰𑌜𑍍𑌜𑍁𑌬𑌂𑌧𑌨𑌂	128—136
	ரஜ்ஜுபந்தனம்	,,
21	𑌮𑍃𑌤𑍍𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌃	136--144
	ம்ருத்ஸம்ஸ்காரம்	,,
22	𑌵𑌰𑍍𑌣𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌃	145—149
	வர்ண ஸம்ஸ்காரம்	,,
23	𑌅𑌕𑍍𑌷𑌿𑌮𑍋𑌕𑍍𑌷𑌣𑌂	150—158
	அக்ஷிமோக்ஷணம்	,,
	𑌅𑌨𑍁𑌬𑌂𑌧𑌂—𑌆𑌯𑌾𑌦𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌂	159—194
	அனுபந்தம் — ஆயாதிலக்ஷணம்	,,

𑌶𑍍𑌰𑍀𑌮𑌹𑌾𑌗𑌣𑌪𑌤𑌯𑍇 𑌨𑌮𑌃

𑌸𑌕𑌲𑌾𑌧𑌿𑌕𑌾𑌰𑌃

ஸ்ரீ மஹாகணபதி துணை.

ஸகளாதிகாரம்

என்னும்

உருமானங்களைப்பற்றிய சிற்ப நூல்

𑌸𑌕𑌲𑌂 𑌨𑌿𑌷𑍍𑌕𑌲𑌂 𑌮𑌿𑌶𑍍𑌰𑌂 𑌵𑌿𑌭𑌾𑌗𑌤𑌃
𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧𑍈𑌵 𑌵𑌪𑍁𑌃 𑌪𑌰𑌮𑍇𑌷𑍍𑌠𑌿𑌨𑌃 ।
𑌵𑌿𑌧𑌿𑌨𑌂 𑌸𑌕𑌲𑌸𑍍𑌯𑌾𑌥 𑌯𑌥𑍋𑌦𑌿𑌤𑌂
𑌶𑍈𑌵𑍀𑌯𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑍇𑌣 𑌤𑌥𑌾 𑌕𑌥𑌯𑌾𑌮𑍍𑌯𑌹𑌂 ॥ க ॥

சுலோகத்திலுள்ள உரை :— பரமேச்வரனுடைய திருமேனியானது ஸகளமென்றும் நிஷ்களமென்றும் மிச்ரமென்றும் சொல்லப்படுகிற விபாகத்தால் ஸகளமானது அவயவங்களோடே கூடியிருக்கும். நிஷ்களமானது லிங்காகாரமாயிருக்கும். மிச்ரமானது முகலிங்கங்களாயிருக்கும். இப்படி யொருமித்தாயிருந்துள்ள பரமேச்வரனுடைய வபுஸ்ஸு (சரீரம்) சசியை (சந்திரனை) தரிக்கப்பட்டிருந்துள்ள ஈசுவரனாலே யாதொருபடி சொல்லப்பட்டதோ அத்தை நான் சொல்கிறேன். (க)

1. கடவுளுடைய திருமேனி ஸகளம், நிஷ்களம், மிச்ரம் என மூன்று வகைப்படும். ஸகளமாவது தலை, உடல், கை கால் முதலிய எல்லா அவயவங்களோடும் கூடிய உருவம். நிஷ்கள

மாவது அங்க அவயவங்கள் இல்லாமல் லிங்கம் முதலான உருவமாக இருக்கும். மிச்ரமாவது அவயவங்களுள் ஏதோ சிலவற்றோடு அமைந்திருக்கும் உருவம். மிச்ர உருவத்திற்கு 'முகலிங்கம்' அதாவது லிங்கத்தில் முகத்திலுள்ள கண் முதலியவை மட்டும் அமைந்திருத்தல் உதாரணமாகும். இந்த உருவத்தில் அவயவம் எல்லாம் உள்ள உருவம், அவயவமே இல்லாத உருவம், இவ் விரண்டின் அம்சங்களும் சேர்ந்திருப்பதால் இதற்கு 'மிச்ரம்' அதாவது 'இரண்டும் கலந்தது' என்ற பெயர் ஏற்பட்டிருக்கிறது. "இவற்றின் விவரங்களை பரமசிவனால் உபதேசிக்கப்பட்டபடி இனி நான் சொல்லுகிறேன்" என்று நூலாசிரியரான அகஸ்திய மஹரிஷி ஆரம்பிக்கிறார்.

தச்சாசலம் சலம் சேதி த்விவிதம் வபுருச்யதே
ஸரளதாரு ஸன்மணி நானா வர்ண சிலா ஸுதா ।
விவிதைர் லோஹைர் ம்ருத்ஸ்னாபி: சர்க்கரை
ருதிதம் ஸ்வரூபமஷ்டவிதம் பவேத் ॥ ௨ ॥

ஸ - உரை:—தத் - அந்த வபுஸ்ஸானது அசலமென்றும் சலமென்றும் இரண்டுபடியாயிருக்கும். அசலமானது சலிக்கப்படாதது. சலமானது சலிக்கப்படும். ஸரள (நேர்மையான) தாருவாலும் (மரத்தாலும்) நல்லமணியாலும், பல வர்ணங்களினாலும், கல்லாலும், ஸுதையாலும், வெவ்வேறு வகைப்பட்டிருந்துள்ள லோஹங்களினாலும், மண்ணாலும், நன்றான சர்க்கரையாலும் (மெல்லிய மணல் அல்லது சுக்காணாலும்) ஸ்வரூபங்கள் எட்டுவிதமாம். (௨)

2. இப்படிச் சொல்லப்பட்ட கடவுளின் உருவங்கள் 'அசலம்,' 'சலம்' என இருவகைப்படும். 'அசலம்' என்பது இருந்த இடத்தை விட்டு நகர்த்தக் கூடாதது. இம்மாதிரியான விக்ரஹத்திற்கு 'மூலஸ்தானம்' அல்லது 'மூலபேரம்' என்று பெயர். 'சலம்' என்பது நினைத்தபடி இடம் விட்டு இடம் நகர்த்தக்கூடியது. (இம் மாதிரியான விக்ரஹத்திற்கு 'உற்சவ விக்ரஹம்' அல்லது 'உற்சவ பேரம்' என்று பெயர்.)

விசேஷ:]

இவ்வுருவங்கள் நல்ல மரங்களாலும், நல்ல ரத்னங்களாலும், 'தாது' அதாவது உலோகச் சத்து அடங்கிய பல வகை வர்ணப் பொடிகளாலும், கருங் கல்லாலும், 'சுதை' என்னும் நற் சாந்தாலும்,[1] பலவகை உலோகங்களாலும் மண்ணாலும், முதல் தரமான சுக்காளுலும், ஆக இந்த எட்டு வகைப் பொருள்களாலும் அமைக்கப்படும்.

வாயி-ஷேவம் ஶாகஂ-ஷரம் ஶௌஂயம் ஶைரம் ஷூாவதிஷ்யதே ।
அஶாஶம் ஶிஶாஷாரஂ யாதஂஜம் ரத்நரெஷயெ
அஶெவ ஷயுஜீயாஷாஹாஸம் யாதஂஜம் ஷவெக் ॥

சு - உரை :—மண்ணாலும், சர்க்கரையாலும், ஸுதையாலும் பண்ணப்பட்டது ஸ்தாவரமென்று சொல்லப்படும். சிலையும் மரமும் சலிக்கவும் சலியாதிருக்கவும்படும். தாதுவும் ரத்னங்களும், லோஹமும் சலிக்கவே படும். படஞ்சிலே ஆபாஸம் தாதுவாலே செய்யப் படும். ஸுதையாலே பண்ணப்பட்டது (அர்த்த) சித்ரம் என்று பெயர். (௩)

3. மண்ணாலும், சுக்காளுலும், சுதை என்னும் நற் சாந்தாலும் அமைக்கப்படும் விக்ரஹங்கள் இடம் விட்டுப் பெயராதவைகளாகவே இருக்கும். கருங்கல், மரம், தாதுவகை இவைகளால் அமைக்கப்படும் விக்ரஹங்கள் அசையாமல் ஓரிடத்திலேயும் இருக்கலாம்; அல்லது அவைகளை இடம் விட்டு இடமும் நகர்த்தலாம். இரத்தினங்கள், உலோகங்கள் இவற்றை இடம் விட்டு இடம் எடுத்துச் செல்லக்கூடிய விக்ரஹங்களை அமைப்பதற்கே உபயோகப் படுத்தல் வேண்டும்.

உருவத்தின் வெளித் தோற்றம் மட்டும் உள்ளதற்கு 'ஆபாஸம்' என்று பெயர். அதற்கு 'தாது' என்னும் வர்ணப் பொடியையே உபயோகிக்க வேண்டும்.

---

1. சுண்ணாம்பும் மணலும் பட்டைச்சாறு முதலியவைகளும் சேர்த்து வெண்ணெய் போல் நன்றாக அரைக்கப்படும் சாந்துக்கு நற்சாந்து என்று பெயர்.

𑌚𑌿𑌤𑍍𑌰𑌾𑌰𑍍𑌧𑌂 𑌸𑍌𑌮𑍍𑌯𑌜𑌂 𑌚𑌾𑌗𑍍𑌨𑍇𑌯 𑌚𑌿𑌤𑍍𑌰𑌂 𑌚𑌿𑌤𑍍𑌰𑌾𑌰𑍍𑌧𑌮𑍇𑌵𑌵𑌾 ।
𑌚𑌿𑌤𑍍𑌰𑌂 𑌸𑌰𑍍𑌵𑌾𑌙𑍍𑌗𑌦𑍃𑌶𑍍𑌯𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌅𑌰𑍍𑌧𑌦𑍃𑌶𑍍𑌯𑌾𑌰𑍍𑌧𑌚𑌿𑌤𑍍𑌰𑌕𑌂 ‖ ௪ ‖

சு - உரை :—ஸர்வாங்கமும் காணப்படுவதாகில் சித்ரமென்றும் அர்த்தாங்கம் தரிசிக்கப்படுமாகில் அர்த்த சித்ரமென்றும் பெயர். (௪)

4. அர்த்த சித்திரம் சுதையினுல் அமைக்கப்படும். சில நூலாசிரியர் சித்திரம், சித்திரார்த்தம் இரண்டையும் சுதையினுல் அமைக்கலாம் என்று கூறியுள்ளனர். சித்திரம் என்பது எல்லா அவயவங்களும் முன்னும் பின்னும் வெளிப்படையாகத் தெரியும்படி அமைக்கப்படுவது. அங்கங்களின் முன் பாதி மட்டும் தெரியும்படி அமைக்கப்படுவது சித்ரார்த்தம் எனப்படும்.

𑌨𑌿𑌮𑍍𑌨𑍋𑌨𑍍𑌨𑌤 𑌵𑌿𑌹𑍀𑌨𑍇𑌨 𑌪𑌟𑍇 𑌭𑌿𑌤𑍍𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌕𑌲𑍍𑌪𑌨𑌾 ।
𑌚𑌿𑌤𑍍𑌰𑌾𑌭𑌾𑌸𑌮𑌿𑌤𑌿 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌮𑍁𑌖𑍍𑌯𑌂 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌂 𑌤𑌥𑌾𑌧𑌮𑌂 ‖ ௫ ‖

சு - உரை :—நிம்ன முன்னதம் (மேடுபள்ளம்) அன்றியிலே கற்பிக்கப்பட்டது ஆபாஸ சித்ரமென்று பெயராவது. அதுதான் படங்களிலென்ன (துணியிலும்) பித்தியிலென்ன (சுவற்றிலும்) கற்பிக்கப்படும். அதனுடைய பலம் உத்தமம், மத்யமம், அதமம். (௫)

5. மேடு பள்ளங்கள் இல்லாமல் அமைக்கப்படும் 'சித்ராபாஸம்' என்னும் உருவங்கள் துணி, சுவர் முதலியவைகளில் தீட்டப்படும் ஓவியங்களாகும். 'ஆபாஸம்' என்ற சொல்லுக்கு 'வெளித் தோற்றம்' என்பது பொருள். மேலே சொல்லப்பட்ட உருவங்களை வைத்துப் பூஜை செய்வதினுல் சித்ரம் என்னும் உருவம் உத்தம பலனையும், சித்ரார்த்தம் மத்திம பலனையும், ஆபாஸம் மிகவும் குறைந்த பலனையும் கொடுக்கும்.

விசேஷ:]

பாரமேச்வரமூர்த்திபே4தா:

ஸோமாஸ்கந்த3ம் சந்த்3ரசேக2ரம் வ்ருஷவாஹநம் ।
ந்ருத்தம் க3ங்கா3த4ரம் சைவ த்ரிபுராந்தகம் ॥ ௬ ॥

கல்யாணம் அர்த்த4நாரீசம் பாசுபதம் ததா2 ।
கங்காலம் கேசவார்த்த4ம் ச பி4க்ஷாடநம் தத: பரம் ॥ ௭ ॥

சண்டே3சாநுக்3ரஹம் த3க்ஷிணேசம் காமவிநாசநம் ।
லிங்கோ3த்3ப4வம் ச மூர்த்தீநாம் பே4தா3: ஷோட3சதா4 ப4வேத் ॥ ௮ ॥

௬ - உரை:—உமையும் பரமேச்வரனும் இளைய நயினாரும் கூடி யிருந்த விக்ரஹமும், சந்திரனை தரிக்கப்பட்டிருந்துள்ள விக்ரஹமும், வ்ருஷ்பத்தை வாஹனமாக உடைய விக்ரஹமும், ந்ருத்தம் ஆடின விக்ரஹமும், கங்கையை தரித்த விக்ரஹமும், த்ரிபுர தஹனம்பண்ணின விக்ரஹமும், திருக்கலியாணம் பண்ணின விக்ரஹமும், அர்த்தாங்கம் பரமேசுவரியைத் தரித்த விக்ரஹமும், அர்ஜுனனுக்கு பாசுபதாஸ்த்ரம் கொடுத்த விக்ரஹமும், கங்காள விக்ரஹமும், கேசவார்த்தமான விக்ரஹமும், சண்டேச்வரனுக்குப் ப்ரஸாதம் கொடுத்த விக்ரஹமும், ருஷிகளுக்கு ஞானோபதேசம் பண்ணின விக்ரஹமும், லிங்கத்தில் நின்று உத்பவமாகத் தோற்றப்பட்ட விக்ரஹமும் ஆகப் பதினாறு படியாம். (௬, ௮)

(6-8) பரமசிவனின் மூர்த்திகள் பதினாறு. அவையாவன:—

1. ஸோமாஸ்கந்தர் அதாவது பார்வதியோடும் முருகனோடும் சேர்ந்து அமர்ந்திருக்கும் மூர்த்தி.

2. சந்திர சேகரர் அதாவது சந்திரனைத் தலையில் ஆபரணமாகத் தரித்தவர்.

3. வ்ருஷ வாகனர் - ரிஷப வாகனத்தின் மீது எழுந்தருளி யிருப்பவர்.

4. நடேசர் - ஒரு காலைத் தூக்கி நின்றாடும் நடராஜ மூர்த்தி.

5. கங்காதரர் - கங்கையைச் சடையில் தரித்தவர்.

6, த்ரிபுராந்தகர் - முப் புரங்களையும் அவைகளில் சஞ்சரித்த அசுரர்களையும் அழித்தவர்.

7. கல்யாண ஸுந்தரர்-பார்வதி தேவியோடு கல்யாணக் கோலத்தில் காட்சியளிப்பவர்.

8. அர்த்தநாரீசுவரர் - தேவியைத் தன் உருவத்தின் இடது பாதியாகக் கொண்டவர்.

9. பாசுபதமூர்த்தி - அர்ஜுன னுக்குப் பாசுபதம் என்ற தனது அஸ்திர[1]த்தைத் தந்தருளிய மூர்த்தி.

10. கங்காள மூர்த்தி - 'கங்காளம்' என்னும் எலும்புக் கூட்டைத் தோளிலேந்தி நடமாடும் உருவம்.

11. கேசவார்த்த மூர்த்தி - ஒரு பாதி சங்கரனும் மற்றொரு பாதி நாராயணனுமாகச் சேர்ந்த உருவம்.

12. பிக்ஷாடன மூர்த்தி - பிக்ஷைக்குச் சென்ற திருக் கோலம்.

13. சண்டேசுவரானுக்ரஹ மூர்த்தி - சண்டிகேசுவரருக்கு அருள் புரிந்த கோலம்.

14. தக்ஷிணாமூர்த்தி-ஸனகாதி மகரிஷிகளுக்குத் தெற்கு முகமாய் அமர்ந்து ஞானோபதேசம் செய்த திருக்கோலம்.

---

1. அஸ்திரம் என்பது மந்திரங்களினாலும், தெய்வ சக்தியினாலும் இயங்கும் அபார சக்தியுடைய ஆயுதம். ஆயுதங்கள் முக்தம், அமுக்தம், முக்தா முக்தம் என 3 வகைப்படும். விட்டு எறியப்படுவது, எறியப்படாதது, விட்டும் விடாமலும் எறியப்படுவது என்பது இவற்றின் பொருள். அஸ்திரம் என்பது முதல் வகையைச் சார்ந்தது. கத்தி, கேடயம் இரண்டாம் வகையைச் சேர்ந்தவை. பாசம் என்னும் கயிறு மூன்றாம் வகையைச் சேர்ந்தது.

விஶேஷ:]

15. கால ஸம்ஹார மூர்த்தி - மார்க்கண்டேயனுக்காக யமனை வென்ற கோலம்.

16. லிங்கோத்பவ மூர்த்தி - லிங்கத்திலிருந்து மேலும் கீழும் அளவிறந்த உருவத்தோடு விஷ்ணுவும், ப்ரம்ஹாவும் அடி முடி காணமுடியாதவாறு தோன்றிய உருவம்.

ஸதேஷாம் ப்ரதிமாநாம் மாநமுத்ஸேதமுச்யதே |
லிங்கமாநம் ச கர்ப்பம் ச த்வாராதிஷ்டாநபாதகம்
ஹஸ்தமாநம் ச தாலம் ச யஜமாநோதயேந ச || ௯ ||

மூலபேராங்குலம் மாநாங்குலம் மாத்ராங்குலம் ததா |
மாநம் த்வேகாதஶவிதம் ஸ்யாத் தத்ஸேதம் பஹுதா பவேத் ||௰||

த - உரை :—லிங்கவசாத் ப்ரமாணமென்றும், கர்ப்பக்ருஹ ப்ரமாணமென்றும், த்வாரவசாத் ப்ரமாணமென்றும், அதிஷ்டான வசாத் ப்ரமாணமென்றும், பாத ப்ரமாணமென்றும், முழத்தாலும் தாலத்தாலும், யஜமானனுடைய உதயத்தாலும், மூல பேராங்குலத்தாலும், மானங்குலத்தாலும், மாத்ராங்குலத்தாலும், ஆக மானபேதங்கள் பதினொன்று மானங்கள் ஸஹாயாவாம். (௯, ௰)

(9-10) இம்மூர்த்திகளின் அளவுகள் இனிச் சொல்லப்படுகின்றன. மூர்த்திகளின் உயரத்தை பதினோரு வகைகளில் நிர்ணயம் செய்யலாம் :—

1. மூலஸ்தானத்திலுள்ள லிங்கத்தின் அளவைக் கொண்டும்,

2. கர்ப்ப கிருஹத்தின் உட்புற அளவைக் கொண்டும்,

3. கர்ப்பகிருஹ வாயிலின் அளவைக் கொண்டும்,

4. கர்ப்பகிருஹத்தின் அதிஷ்டானம் அல்லது அடிப்பட்டறையின் அளவைக் கொண்டும்,

5. பாதம் அதாவது அடிப்பட்டறையின் பேரில் கட்டப்படும் பகுதியின் உயரத்தைக் கொண்டும்,

6. ஹஸ்தம் என்னும் முழ அளவாலும்

7. தாளம் என்னும் சாண் அளவாலும்

8. கோயிலை நிர்மாணிக்கும் யஜமானனுடைய உயரத்தைக் கொண்டும்,

9. மூலபேராங்குலம் அதாவது மூலஸ்தானத்தின் உயரத்தைத் 'தாளமான' விதி[1] ப்படி அதற்குரிய அங்குலத் தொகையால் வகுத்துக் கிடைத்த அங்குல அளவாலும்

10. மானங்குலம் அதாவது யவை, நெல் முதலிய தானியங்களின் அளவினல் நிர்ணயிக்கப்பட்ட அங்குல அளவாலும்

11. மாத்ராங்குலம் அதாவது யஜமானனுடைய நடுவிரலின் நடுப் பகுதியின் நீளம் அல்லது அகலமாக நிர்ணயிக்கப்பட்ட அங்குலத்தாலும் நிர்ணயம் செய்யலாம்.

இவை ஒவ்வொன்றும் பலவகைப்படும்.

𑌸𑍍𑌵𑌜𑌾𑌂𑌶𑍋𑌦𑌯 𑌤𑌾𑌲𑌨𑌾𑌭𑌸𑍍𑌤𑌪𑍍𑌰𑌮𑌂 𑌵𑌾𑌷𑍍𑌟𑌯𑌾𑌂𑌶𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌤𑌦𑍍𑌗𑍍𑌰𑍇𑌣 𑌮𑌾𑌨𑍇𑌷𑍁 𑌯𑌾𑌨𑍍𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑌵𑌰𑍍𑌤𑍍𑌯𑌂𑌶𑌾𑌯𑌿𑌕𑌂 𑌪𑍍𑌰𑍋𑌦𑌯𑌂 ॥ ௰௧ ॥

𑌭𑍀𑌨𑌾𑌂𑌵𑌾𑌟𑌵𑌿 𑌸𑍍𑌵𑍇𑌨 𑌤𑌾𑌨𑍇𑌨𑍍𑌤𑌿𑌤𑌂 𑌸𑌂𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌤 𑌯𑌷𑍍𑌟𑌿𑌂𑌶𑌤𑌿𑌃 ।
𑌪𑍈𑌶𑌾𑌣𑌾𑌂 𑌭𑌿 𑌶𑌿𑌵𑌾𑌂𑌶𑌤𑌾𑌨𑍍𑌤𑌵𑌤𑍍𑌤𑌃 𑌸𑍍𑌵𑌾𑌯𑌂𑌭𑌵𑍇 𑌤𑌾𑌨𑍍𑌤𑌵𑍇 ॥ ௰௨ ॥

---

1. தாளமான விதியாவது - விக்கிரகங்களின் அங்க அளவுகளை நிர்ணயிப்பதற்காக, அவை ஒவ்வொன்றுக்கும் 'உரியதென' ஓர் அளவை ஏற்படுத்தி, அந்த அளவை ஆதாரமாக வைத்துக்கொண்டு அங்கங்களின் அளவை விவரிக்கும் முறை. விக்ரஹங்களுக்கு 'உரிய' அளவுகள், 'தாளம்' என்ற சாண் அளவால் நிர்ணயிக்கப்பட்டு 'தசதாளம்' என்ற 10 சாண் முதல் 'ஏகதாளம்' என்ற ஒரு சாண் வரை 10 வகையாக வகுக்கப்பட்டிருக்கிறது. 10 சாண் முதல் 3 சாண் வரையில் ஒவ்வொன்றிலும் 4 அங்குலம் கூட்டிக் குறைத்து உத்தமம், மத்திமம், அதமம் என்ற மூன்று வகையுமுண்டு. 'தாளம்' 12 அங்குலம் கொண்டதென்று சொல்லப்பட்டிருக்கிறது. அங்குலம் ஒன்றுக்கு யவை 8.

விஶேஷ:]

சு - உரை :—பூஜாம் சத்தினுடைய உயரமென்ன, அகலமென்ன அதன் சுற்றுப் பருமை யென்ன இவற்றிலே ஒன்றைப் பதினாறு செய்து, அந்த பாகத்தினாலே 3, 5, 7, 9, 11 அம்சங்களை ஏற்றியும் குறைத்தும், ஸமமாக்கியும், ஆக ஸங்க்யைகள் முப்பத்து மூன்று படி சொல்லப்பட்டது. ஸ்வாயம்பவலிங்கத்திலும் மானவ லிங்கத்திலும் ஷோடசப்ரதிமைகளுக்கும் சொல்லப்பட்டது. (௰௧, ௰௨)

(11-12) மூலஸ்தானத்திலுள்ள லிங்கத்தின் அளவைக் கொண்டு மூர்த்திகளின் அளவை நிர்ணயிக்கும் முறை வருமாறு :—

லிங்கத்தின் 'பூஜாம்சம்' அதாவது பூஜை செய்யும் மேல் பாகத்தின் 'உதயம்' என்னும் உயரம், அல்லது 'தாரம்' என்னும் குறுக்களவு (விட்டம்) அல்லது 'நாஹம்' என்னும் சுற்றளவு இவற்றில் ஒன்றைப் பதினாறு கூறு செய்து அந்தக் கூறுகளில் 16 கூறுகளையும் அப்படியே வைத்துக் கொண்டோ, 3 அல்லது 5 அல்லது 7 அல்லது 9 அல்லது 11 கூறுகளைக்கூட்டியோ அல்லது குறைத்தோ மூர்த்திகளின் உயரத்தை நிர்ணயிக்கலாம். 16 கூறுகளோடு 3, 5, 7, 9, 11 கூறுகளைக் கூட்டும்போது 19, 21, 23, 25, அல்லது 27 கூறுகள் உள்ள ஐந்து உயரங்கள் கிடைக்கும். குறைக்கும் போது 13, 11, 9, 7, 5 இந்தக் கூறுகள் உள்ள ஐந்து உயரங்கள் கிடைக்கும். கூட்டாமலும் குறைக்காமலும் வைத்துக்கொண்டால் 16 கூறுகள் உள்ள ஒரு உயரம் கிடைக்கும். ஆகப் பதினொரு வகை உயரங்கள் கிடைக்கின்றன. இவ் விதமாக ஸ்வயம்பு லிங்கங்கள் அதாவது ஸ்தல புராணங்களின்படி தானாக உண்டான லிங்கங்களின் அளவுகளைக் கொண்டும் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட லிங்கங்களின் அளவுகளைக் கொண்டும் பூஜாம்சத்தைக் கொண்டு[1] அளவுகளும், தாரத்தைக் கொண்டு

1. 'பூஜாம்சோதயம்' என்பதை நிர்ணயிக்கும்போது பீடத்தின் உயரத்தை நீக்கிவிட வேண்டுமென்றும், ஸ்வாயம்புவ லிங்கத்தின் சிரஸ்ஸை சேர்த்துக் கொள்ளவேண்டும், மானவலிங்கத்தில் சிரஸ்ஸின் உயரத்தை நீக்கிவிடவேண்டுமென்றும் மானஸாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

பூஜாம்ஶோதயமானே து பீடோச்சம் த்யஜேத் புத: ।
ஸ்வயம்பூலிங்கமானே து ஶிரோமானஸ்ய ஸங்க்ரஹ: ।
மானுஷே லிங்கமானே து தச்சிரோமானகம் த்யஜேத் ॥

மாநஸா. ௬௪, ஶ்லோ. ௭, ௮, ௯.

அளவுகளும், நாஹத்தைக்கொண்டு அளவுகளும் ஆக 33 அள வுகள் கிடைக்கும்.

கர்ப்பகேஹாதிவிஸ்தாரே நவாம்ஶம் கர்ப்பமானம் பவேத்
ஶுத்தத்வாரஸமம் ச பாதஹீனம் பாதாதிகம் த்வயம் ததா |
வேதாம்ஶம் விபஜேந்மத்யமிதம் த்வாரமானம் ததா
அதிஷ்டானாங்க்ரிவஶாத்மானம் உதிதம் அஷ்டாதஶோத்தம் விதா: || ௧௨ ||

கு - உரை :—கர்ப்ப க்ருஹத்தை ஒன்பது கூறுசெய்ய ஒன்பது ப்ரமாணமாம். சுத்த த்வாரஸமமும் நாலத்தொன்று குறையவும் நாலத்தொன்று ஏற்றவும் இரண்டினுடைய நடுவை நாலு கூறுசெய்ய ஒன்பது ப்ரமாணமாம். அப்படியே அதிஷ்டானத்திலும் அங்க்ரி வசத்திலும் பதினெட்டு ப்ரமாணமாம். (௧௨)

(13) கர்ப்ப கிருஹத்தின் உயரத்தைக் கொண்டு மூர்த்திகளின் உயரத்தை நிர்ணயிக்கும் விதம் எவ்வாறெனில், கர்ப்பகிருஹத்தின் உள் கூட்டு சுவற்றின் உயரத்தை 9 கூறுகள் செய்து 1, 2, 3, 4, 5, 6, 7, 8 அல்லது 9 கூறுகளாகிய 9 வகை உயரங்களாக மூர்த்தியின் உயரத்தை நிர்ணயிக்கலாம். கர்ப்பகிருஹத்தின் வாயில் உயரத்தை வாயிற்படியை நீக்கி அளந்து அதில் நாலில் ஒரு பாகம் குறைத்தோ, கூட்டியோ சமமாகவோ எடுத்துக் கொண்டால் அந்த உயரத்தில் $\frac{3}{4}$ பங்கு, 1 பங்கு, $1\frac{1}{4}$ பங்கு என்ற மூன்று அளவைகள் கிடைக்கும். இவைகளின் இடையேயுள்ள தூரங்களை நான்கு கூறுகளாகச் செய்தால் $\frac{3}{4}$ முக்கால், $\frac{13}{16}$ முக்காலே வீசம், $\frac{7}{8}$ முக்காலே அரைக்கால், $\frac{15}{16}$ முக்காலே மூன்று வீசம், 1 ஒன்று, $1\frac{1}{16}$ ஒன்றே வீசம், $1\frac{1}{8}$ ஒன்றே அரைக்கால் $1\frac{3}{16}$ ஒன்றே மூணு வீசம், $1\frac{1}{4}$ ஒன்றேகால் இப்படி 9 வகை உயரங்கள் கிடைக்கும்.

இதேவிதமாக அதிஷ்டானத்தின் அதாவது அடிப் பட்டறையின் உயரத்தைக் கொண்டு 9 வகை உயரங்களும், 'அங்க்ரி' அதாவது அடிப்பட்டறையின் மேல் கட்டப்படும்

𑌵𑌿𑌶𑍇𑌷𑌃]

பாதம் என்ற உறுப்பின் உயரத்தைக் கொண்டு 9 வகை உயரங்களும் ஆக 18 வகை உயரங்களும் கிடைக்கும்.

> 𑌏𑌕𑌹𑌸𑍍𑌤𑌂 𑌸𑌮𑌾𑌰𑌭𑍍𑌯 𑌹𑌸𑍍𑌤𑍈𑌕𑍇𑌨 𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌧𑌯𑍇𑌤𑍍 ।
> 𑌨𑌵𑌹𑌸𑍍𑌤𑌾𑌨𑍍𑌤𑌪𑌰𑍍𑌯𑌨𑍍𑌤𑌂 𑌨𑌵𑌧𑌾 𑌹𑌸𑍍𑌤𑌮𑌾𑌨𑌕𑌮𑍍 ॥ ௰௪ ॥

கு - உரை:—ஒரு முழம் தொடங்கி ஒவ்வொரு முழப் பெருக்கத்தால் ஒன்பது முழமளவாக ஒன்பது ப்ரமாணமாம். (௰௪)

> 𑌏𑌕𑌤𑌾𑌲𑌂 𑌸𑌮𑌾𑌰𑌭𑍍𑌯 𑌤𑌾𑌲𑍈𑌕𑍇𑌨 𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌧𑌯𑍇𑌤𑍍 ।
> 𑌨𑌵𑌤𑌾𑌲𑌾𑌨𑍍𑌤𑌪𑌰𑍍𑌯𑌨𑍍𑌤𑌂 𑌨𑌵𑌧𑌾 𑌤𑌾𑌲𑌮𑌾𑌨𑌕𑌮𑍍 ॥ ௰௫ ॥

கு - உரை:—ஒரு தாலம் தொடங்கி ஒவ்வொரு தாலப் பெருக்கத்தால் ஒன்பது தாலமளவாக ஒன்பது ப்ரமாணமாம். (௰௫)

(14-15) ஹஸ்தம் என்னும் முழத்தாலும் தாளம் என்னும் சாணாலும் ப்ரமாணம்:—ஒரு முழம் முதல் 9 முழம் வரையில் ஒவ்வொரு முழமாகச் சேர்த்துக் கொண்டு போகக் கிடைக்கும் 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9 என்ற முழ அளவைகளை உபயோகப் படுத்தலாம். அதேவிதமாக ஒரு தாளம் அல்லது ஒரு சாண் தொடங்கி ஒவ்வொன்றாகச் சேர்த்துக்கொண்டு 9 வகை உயரங்களையும் பிரயோகிக்கலாம்.

> 𑌯𑌜𑌮𑌾𑌨𑌸𑌮𑍋𑌤𑍍𑌤𑍁𑌙𑍍𑌗𑌂 𑌨𑍇𑌤𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌾𑌸𑍍𑌯𑌸𑍀𑌮𑌕𑌂 ।
> 𑌹𑌨𑍍𑌵𑌨𑍍𑌤𑌂 𑌬𑌾𑌹𑍁𑌸𑍀𑌮𑌾𑌨𑍍𑌤𑌂 𑌸𑍍𑌤𑌨𑌾𑌨𑍍𑌤𑌂 𑌹𑍃𑌦𑌯𑌾𑌨𑍍𑌤𑌕𑌂 ॥
> 𑌸𑌪𑍍𑌤𑌮𑌾𑌨𑌮𑌿𑌦𑌂 𑌜𑍍𑌞𑍇𑌯𑌂 𑌯𑌜𑌮𑌾𑌨𑌵𑌶𑌾𑌦𑍍𑌬𑍁𑌧𑍈𑌃 ॥ ௰௬ ॥

கு - உரை:—யஜமானனுடைய ஸமமும், நேத்ராந்தமளவாகவும், ஆஸ்யாந்தம் அளவாகவும், ஹந்வந்தமளவாகவும், பாஹுஸீமாந்தமளவாகவும், ஸ்தனாந்தமளவாகவும், ஹ்ருதயாந்தமே அளவாகவும் யஜமான வசத்தால் ப்ரமாணம் ஏழுபடியாவது. (௰௬)

16. கோயிலை நிர்மாணம் செய்யும் யஜமானனுடைய உயரத்தில் (1) பாதத்திலிருந்து தலையின் உச்சி வரையில்

உள்ள உயரம் (2) கண் வரையில் உள்ள உயரம் (3) வாய் வரையில் உள்ள உயரம் (4) முகவாய்க் கட்டை வரையில் உள்ள உயரம் (5) புஜத்தின் உச்சிவரையில் உள்ள உயரம் (6) மார்பு வரையில் உள்ள உயரம் (7) ஹ்ருதயம் வரையில் உள்ள உயரம் இவ்விதமாக யஜமானனுடைய உயரத்தைப் பொறுத்து 7 வகை உயரங்கள் கிடைக்கும்.

[illegible] |
[illegible] ||
[illegible] || ௰௭ ||

சு - உரை :—ஸ்வாயம்பவமான லிங்கங்களில் மூர்த்னிமானம் தாரநாஹங்களின் ப்ரமாணம் நிச்சயிக்கத் தெரியாவிடில் சிரஸ்ஸளவும் உயரமும், நாஹதாரங்கள் ஸ்தூலமான தேசங்களிலும் ஸங்க்ரஹிக்கப் படும். (௰௭)

17. ஸ்வயம்பூ லிங்கங்களில் பூஜா ஸ்தானத்தின் 'மூர்த்தா' என்னும் தலையளவு, 'தாரம்' என்ற குறுக்களவு, 'நாஹம்' என்ற சுற்றளவு இவை நிச்சயிக்க முடியாவிடில் சிரஸ் (தலை) உள்பட உயரத்தையும், லிங்கம் எவ்விடத்தில் அதிகப் பருமனாயிருக்கிறதோ அந்த இடத்தின் தாரம் என்ற விட்டத்தையும் நாஹம் என்ற சுற்றளவையும் எடுத்துக் கொள்ள வேண்டும்.

[illegible] |
[illegible] || ௰௮ ||

சு - உரை :—லிங்கவசாத் பூஜாம் சத்தினுடைய உயரத்தையும், (மூல) பேரவசாத் பேரத்தினுடைய உயரத்தையும் நூற்றிருபத்திநாலு கூறு செய்து அதிலே ஒரு கூறு மூல பேராங்குலம் என்பது இஷ்டம். (௰௮)

18. மூல பேராங்குலம் :—மூலஸ்தான லிங்கத்தின் சிரஸ்ஸவும் உள்ள பூஜாம்சத்தின் உயரத்தை 124 கூறுகள்

விசேஷ:]

செய்து கிடைக்கும் ஒரு கூறின் அளவே மூல பேராங்குலம் ஆகும். (அதாவது 124 அங்குலம் என்பது உத்தம தசதாளத்தின் அளவு. ஆகையால் லிங்கத்தை உத்தம தசதாளத்தில் உண்டானதாகக் கருதவேண்டும்.) இதேவிதமாக லிங்கமல்லாத மூலபேரம் உள்ள இடத்திலும் அந்த மூலபேரத்தின் உயரத்தை 124 கூறு செய்து ஒரு கூற்றை மூலபேராங்குலமாகக் கொள்ளவேண்டும் (இவ்விடத்திலும் மூல பேரம உத்தம தச தாளமாகக் கொள்ளப்படுகிறது.)

> யந்மூலபேராங்குலமாநமாத்ரா
> ப்ரமாணமுக்தம் ப்ரதிமாதிமாநம் |
> தத்ஸங்க்யயா ஆய ஸுமாதியோகம்
> விதேயமந்யந்ந விதேயமாஹு: || ௧௮ ||

௧௮ - உரை :—யாதொரு மூல பேராங்குலத்தாலே, மானுங்குலத்தாலே, மாத்ராங்குலத்தாலே, ப்ரதிமாதிகளுக்கு ப்ரமாணம் சொல்லப்பட்டதோ, அது ப்ரதிமைகளுக்கு உயரமாவது. அந்த ஸங்க்யையாலே ஆயாதிசுபம் (சுத்தி) செய்யக்கடவது. அது இஷ்டம். அல்லாத ப்ரமாணங்கள் விதேயமல்லவென்று வித்வான்களாலே சொல்லப்பட்டது. (௧௮)

19. ப்ரதிமை என்னும் மூர்த்திகளுக்கு உயரம் மூல பேராங்குலத்தாலோ அல்லது இனி விவரிக்கப்படும் 'மானுங்குலம்' 'மாத்ராங்குலம்' என்ற அளவுகளினுலோ சொல்லப்பட்டால் அந்த அங்குலங்களின் எண்ணிக்கையையே 'ஆயாதி சுத்திக்கு' அதாவது சுபத்தைக் கொடுக்கக் கூடிய அளவை நிச்சயிக்கும் விஷயத்தில் உபயோகிக்க வேண்டும். (அதாவது இனி விவரிக்கப்படும் 'ஜாத்யம்சம் சேர்க்கத்தக்கதில்லை.)

> ஷட்வர்க்காஷ்டவர்க்காதிவிஹீநமத்யம்
> ஜாத்யம்ஶகம் க்ரியதே மாநமுக்தம் |
> ஸாமாந்யதஶ்சைவ மாநஸாயமேதந்மாநாநாம்
> மாநாநாம் மாநம் ப்ரவிஶ்ய விதிநா விதேயமாஹு: || ௧௯ ||

க - உரை :—ஆறுயவை (வாற்கோதுமை), ஏழுயவை, எட்டு யவை அகலங்களிலே உத்தமம் மத்யமம் அதமங்கள் மூன்று படியாய் ஆச்சுது. குள நெல்லினுடைய நீளத்தாலும், மூன்று, மூன்றரை, நாலு கொண்டது உத்தம, மத்யம, அதமங்களாக இப்படி மூன்றுபடியாக மானுங்குலம் ஆறுபடியாக வைக்கப்பட்டது. (உ௰)

20. மானுங்குலம் :—யவை என்னும் வாற்கோதுமை தானியத்தின் அகலத்தை எடுத்துக் கொண்டு 6 யவை யகலம், 7 யவை யகலம், 8 யவை யகலம் என மூன்று வகையாக மானுங் குலம் ஏற்பட்டிருக்கிறது. மேலும் சாலி என்னும் உயர்ந்த சம்பா நெல்லின் நீளத்தை எடுத்துக் கொண்டு 3 சாலி நீளம், 3½ சாலி நீளம், 4 சாலி நீளம் என்று மற்றும் மூன்று வகை மானுங்குலமும் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விதமாக மானுங் குலம் 6 வகைப் படும்.

யஜமாநத³க்ஷிணேஹஸ்தே மத்⁴யமாங்கு³லிமத்⁴யமே ।
பர்வதை³ர்க்⁴யம் ததா²ம்வா விஸ்தாரம் மாத்ராங்கு³லமிதீர்யதே ॥ உ௰க॥

க - உரை :—யஜமானனுடைய வலக்கையிலே நடுவிரலின் நடு விறைக்கும் மேல்விறைக்கும் நடுச்ரேஷ்டம். அகலம் அதமம். மாத்ராங் குலம் இரண்டுபடி விதிக்கப்பட்டது. (உ௰க)

மாத்ராங்குலம் :—

21. யஜமானனுடைய நடுவிரலின் நடுப்பாகத்தின் நீளம் அல்லது அகலத்தை மாத்ராங்குலமாகக் கொள்ளலாம். நீளத்தை எடுத்துக் கொள்வது உத்தமம். அகலத்தை எடுத் துக் கொள்வது அதமம். இப்படி 2 வகையாக மாத்ராங்குலம் சொல்லப்பட்டிருக்கிறது.

மாநவைர்நிஷ்க்ருதே லிங்கே³ ஶிரோமாநம் விதீ⁴யதே ।
ஸம்ப்ரமாணம் நிஶ்சித்ய கு³ர்வே ஸகலவஸ்துஷு ॥ உ௰உ ॥

க - உரை :—மனுஷ்யரால் நிர்மிக்கப்பட்டிருந்துள்ள லிங்கங் களுக்கு சிரோமானமொழிய நிச்சயிக்கப்படும். (உ௰உ)

𑌵𑌿𑌶𑍇𑌷𑌃]

22. ஸ்வயம் பூலிங்கமல்லாமல் மனிதர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்ட லிங்கத்தின் அளவுகளைக் கொண்டு மூர்த்திகளின் உயரத்தை நிச்சயிக்கும்போது 'உதயம்' எனும் உயரத்தை லிங்கத்தின் சிரஸை நீக்கி உயரத்தை எடுத்துக் கொள்ள வேண்டும்.

𑌸𑌪𑍍𑌤𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌸𑌮𑌾𑌰𑌭𑍍𑌯 𑌦𑍍𑌵𑍍𑌯𑌙𑍍𑌗𑍁𑌲𑌵𑌿𑌵𑌰𑍍𑌧𑌨𑌾𑌤𑍍 ।
𑌤𑍍𑌰𑌯𑍋𑌵𑌿𑌂𑌶𑌚𑍍𑌛𑌤𑌾𑌙𑍍𑌗𑌂 𑌚 𑌮𑌾𑌨𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑍈𑌃 ॥ ௨௰௩ ।

சு - உரை :—எழுவிரல் தடங்கி ஈரிரண்டுவிரல் வர்த்தனத்தினாலே நூற்றிருபத்து மூன்று விரலளவாக மானுங்குலம், மாத்ராங்குலம், மூல பேராங்குலம், மான அங்குலத்ரயங்களிலும் ப்ரமாணம் விதிக்கப்பட்டது. (௨௰௩)

23. மூல பேராங்குலம், மானுங்குலம், மாத்ராங்குலம் இவற்றைக் கொண்டு மூர்த்திகளின் உயரத்தை நிர்ணயிப்பது எவ்வாறெனில், 7 அங்குலம் முதல் இரண்டிரண்டு அங்குலங்களாகச் சேர்த்துக் கொண்டு போய் 123 அங்குலம் வரையில் 59 வகையாக உயரத்தை நிர்ணயிக்கலாம்.

𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑍇𑌨 𑌗𑍃𑌹𑌾𑌰𑍍𑌚𑌾𑌨𑌾𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌮𑌾𑌨𑌾𑌂 𑌤𑍁 𑌨𑌾𑌨𑍍𑌯𑌥𑌾 ।
𑌤𑍍𑌰𑌿𑌷𑍍𑌵𑌙𑍍𑌗𑍁𑌲𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑍇𑌷𑍁 𑌜𑌾𑌤𑍍𑌯𑌂𑌶𑌕𑌂 𑌨𑌾𑌰𑍋𑌪𑌯𑍇𑌤𑍍 ॥ ௨௰௪ ॥

சு - உரை :—க்ருஹார்ச்சனைகளுக்கு மாத்ராங்குலத்தாலே ப்ரமாணம் நிச்சயிக்கப்பட்டது. ஆலய பிம்பங்களுக்கு ஆகாது. மூன்றங்குல ப்ரமாணங்களிலும் ஜாத்யம்சம் ஏற்படக் கடவனவல்ல. (௨௰௪)

24. வீடுகளில் பூஜைக்கு வேண்டிய பிம்பங்களின் ப்ரமாணத்தை மாத்ராங்குலத்தினாலேயே நிச்சயிக்க வேண்டும். ஆலய பிம்பங்களுக்கு இது கூடாது. மேலும் மூல பேராங்குலம், மாத்ராங்குலம், மானுங்குலம் இவைகளினால் உயரத்தை நிச்சயித்து ஆயாதி சுத்தி [1] செய்யும் போது 'ஜாத்

1. ஆயாதி சுத்தி விசுவகர்மா மதப்படி 10 வகை :—ஆயம், வ்யயம், வாரம், நக்ஷத்திரம், பாம்சம், அம்சம், பக்ஷம், யோநி, ராசி, கணம். இவற்றின் விவரம் 'ஆயாதி' என்ற இதன் அனுபந்தத்தில் காண்க. இந்த நூலில் ஆயம், வ்யயம், வாரம், நக்ஷத்திரம் அம்சம், யோநி, என்ற 6 மட்டும் சொல்லப் பட்டிருக்கிறது.

யம்சம்' அதாவது நிர்மாணம் செய்பவரின் ஜாதியைப் பொறுத்துச் சேர்க்கப்பட வேண்டிய அளவைச் சேர்த்துக் கொள்ளக் கூடாது.

ஸாஊாநூ்ம் ஸவஜாதீநாம் தநூாநெஷாய நிஷ்சிதம் ।
யஷாநூஊாநம் ஸம்ஞாஹூம் தக்ஷூணம் விஶெஷதঃ ॥ ௨௫ ॥

சு - உரை:—ஸர்வ ஜாதிகளுக்கும் ஸமானம் அவ்வவர்மானங்களாலே ஆயாதி நிச்சயிக்கப்படும். இன்னும் வேறேயும் விசேஷித்துக் கொண்டு சொல்லப்படுகின்றது. (௨௫)

25. மேலே சொல்லப்பட்ட 3 வகையான அங்குல ப்ரமாணங்களை உபயோகிக்கும் போது எல்லா ஜாதிகளுக்கும் ஒரே வகையாகவே ஆயாதி சுத்தி செய்தல் வேண்டும். வேறுவிதமாகப் பிரமாணங்களை உபயோகிக்கும் போது அவ்வவர்க்குரிய ஜாத்யம்சத்தையும் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

சுஷஷஷ்வகவஇாகூ்வெ வெதஹியாமஷ்வயம் ।
ஹாமம் கூவெகவஹாமெந யாக்தம் ஜாதாூஷிகொஹதம் ॥
ஹமெஸாஷி அதாணாம் தா ஊாநஜகஷகூஊஹிதாঃ ॥௨௬॥

சு - உரை:—எட்டு, ஆறு, இரண்டு, ஒன்று, இவற்றைப் பத்தாலே பெருக்கி இதன்மேல் நாலு, இரண்டு, நாலு, ஆறு, இவற்றைக் கூட்டி இதன்மேலே ஒவ்வொரு பாகம் ஏற்றின் இலக்கம் 85, 63, 25, 16 பண்ணி இதிலே ஒவ்வொரு பாகம் ஜாத்யம்சகம் என்று பெயர். இந்த இலக்கங்களை. (௨௬)

சுஷாஹிவயிதெ ஊக்ஷஹாதெதெசுஃ ஊக்ஷவிஷூதெ ।
தஜ்ஜாதிஷிநம் வொக்தம் தீநம்ஸவஸயாதம் ॥ ௨௭ ॥

சு - உரை:—8 ஆல் பெருக்கி 27-ல் கழிக்க நக்ஷத்திரமாம் அவ்வவர் ஜாதிகளுக்கு இப்படி தினம் சொல்லப்பட்டது. அந்த தினங்களாலே எல்லா ஜாதிகளுக்கும் சுபாயாதிகள் பார்க்கப்படும். (௨௭)

ஷிபெபஷ்ঃ]

(26-27) ஜாத்யம்சம் என்பதாவது—மூர்த்திகளை நிர்மாணம் செய்விக்கும் கர்த்தாவின் ஜாதியைப் பொறுத்துப் பிராமண, க்ஷத்திரிய, வைசிய, சூத்ர ஜாதிகளுக்கு முறையே 8, 6, 2, 1 இவற்றைப் பத்தாலே பெருக்கி, அவற்றோடு 4, 2, 4, 6 இவைகளைக் கூட்டினல் முறையே 84, 62, 24, 16 கிடைக்கும். பேரங்களின் உயரத்தை 84, 62, 24, 66 பாகம் செய்து வரும் ஒரு பாகம் ஜாத்யம்சம் ஆகும். இந்த ஜாத்யம்சத்தைச் சேர்த்துக்கொண்டு கிடைக்கும் அளவை எட்டால் பெருக்கி 27 ஆல் வகுக்க வரும் மிச்சம் அசுவினி முதலாக அந்தந்த ஜாதிக்குரிய நக்ஷத்திரமாகும்.

ஶுஹமாநம் நயத்தெசு ராஜக்ராமாதிவாஸ்துஷு ।
தஷ்ஸ்யம் வஷிக்வஷிக்யா ஸஜெஷ்ணஷஸ்ஷகம் ॥ ௨௰௮ ॥
ஸாமெகம் வயவெதீயாவச ஶுஸாயாதிகலெம்ஸவம் ।
தநாநம் தெவமாநம்ஸ்யாக் பாதாதுஷ்ணீஷஸீமகம் ॥ ௨௰௯ ॥

க - உரை:—ராஜக்ராமாதி வாஸ்துக்களுக்கு சுபமானம் குறித்திலேயாகில் அதனது உத்ஸேதத்தை நூறுபண்ணி ஐயாறு முப்பது ஆதியாக ஒவ்வொரு பாக போகவர்த்தனத்தினலே நூறளவுஞ்செல்லயாதொரு அளவு சுபமாக ஸர்த்வாதி ஸம்பவிப்பதோ அந்த மானம் தேவனுக்கு பாதாதுஷ்ணீஷாந்தமாக உயரமாவது. ௨௰௮-௨௰௯)

(28-29) அரசனுக்காக ஏற்பட்ட சிற்பத்திலும், க்ராமத்திற்காக ஏற்பட்ட சிற்பத்திலும் சுபத்தைக் கொடுக்கக் கூடிய சரியான அளவு சுலபமாகக் கிடைக்காவிட்டால், அளவை 100 பங்கு பண்ணி, 30 பங்கு முதல் ஒவ்வொரு பங்காகக் கூட்டிக் கொண்டு போய், 100 பங்கு வரையில் அளவு எண்களை சோதித்துப் பார்த்து சுபமான அளவைத் தீர்மானிக்கலாம். அப்படித் தீர்மானித்த அளவை மூர்த்தியின் பாத முதல் உஷ்ணீஷம் வரையில் உள்ள உயரமாகக் கொள்ளவேண்டும்.

தெஜொாஉஷ்நஷவஸ்நஷத்ருவிலெஜ்யா
ஸுரக்வாஉஷ்யெஷமநிதிதெஶஷஶப்ரவெஶெঃ ।

ஶிஷ்டம் ஹி யோநிதிநவாரவ்யயாம்ஶம்
கேதுத்வஜாத் பஹுலாத் லாவதஸ்கராத்யா: ॥ ௩௰ ॥

சு - உரை :—3, 8, 9, 8, 9, 4 இவற்றினலே பெருக்கி 8, 27, 7, 12, 10, 9 இவற்றினலே கழித்து சேஷித்தது யோநி, தினம், வாரம், ஆயம், வ்யயம், அம்சகன் (என்று கண்டு கொள்க). யோநிக்கு த்வஜமாதியாகவும், தினத்துக்கு அசுவதி முதலாகவும், வாரத்திற்கு ஞாயிறு முதலாகவும், ஆயத்துக்கு பஹுள முதலாகவும், வ்யயத்துக்கு லாகவம் முதலாகவும், அம்சத்துக்கு தஸ்கரம் ஆதியாகவும், சொல்லப்பட்டது. (௩௰)

(30) ஆயாதி :—அளவின் எண்ணிக்கையை மூன்றால் பெருக்கி எட்டால் வகுத்துக் கிடைத்த மிச்சத்தால் யோனியையும்; எட்டால் பெருக்கி 27 ஆல் வகுத்துக் கிடைத்த மிச்சத்தால் நக்ஷத்திரத்தையும், ஒன்பதால் பெருக்கி ஏழால் வகுத்த மிச்சத்தால் வாரத்தையும், எட்டால் பெருக்கி 12ஆல் வகுத்து வந்த மிச்சத்தால் ஆயத்தையும், 9 ஆல் பெருக்கி 10 ஆல் வகுத்து வந்த மிச்சத்தால் வ்யயத்தையும், 4ஆல் பெருக்கி 9 ஆல் வகுத்து வந்த மிச்சத்தால் அம்சத்தையும் நிச்சயிக்க வேண்டும். யோனியை 'த்வஜம்' முதலாகவும், தினம் என்னும் நக்ஷத்திரத்தை 'அச்வினி' முதலாகவும், வாரத்தை 'ஞாயிறு' முதலாகவும், ஆயத்தை, 'பஹுள' முதலாகவும், வ்யயத்தை 'லாகவம்' முதலாகவும், அம்சத்தை 'தஸ்கரம்' முதலாகவும் கணக்கிட்டு நிச்சயிக்க வேண்டும்.

த்வஜஹரி வ்ருஷஹஸ்தி யோநயஸ்தே ஶுபாக்யா:
ஜநநயுதமதோ த்விதீயதாரா ஶுபர்க்ஷா: ।
விதநுருதுஸமாப்தி வாரஸம்வ்யாம்ஶகாஸ்யா
வ்யயஶுபஹுபஹம்ஸாஸ்தஸ்கராத்யாம்ஶகாத்யா ॥ ௩௰௧ ॥

சு - உரை :—யோநிகளில் த்வஜமும் ஸிம்ஹமும், ரிஷபமும் யானையும் சுபர்கள். நாளில் ஜன்மம், இரண்டாம் நாள், நாலாம் நாள்,

விசேஷ:]

ஆறாம் நாள், எட்டாம் நாள், ஒன்பதாம் நாள் இவை நன்று; வாரங்களில் வெள்ளியும், வியாழனும், திங்களும் சுபங்கள். அம்சங்களில் நல்ல பெயருடையவே சுபங்கள். கர்த்தாவினுடைய ஜன்ம நக்ஷத்திரம் துவக்கி சுபாசுபங்களை விசாரித்துக் கொள்ளவும். (௩௰௧)

31. யோனிகளில் த்வஜம், சிம்மம், வ்ருஷபம், யானை இவைகள் சுபம், நக்ஷத்திரங்களில் கர்த்தாவின் நக்ஷத்திரத்திலிருந்து 1, 2, 4, 6, 8, 9 வது நக்ஷத்திரங்கள் சுபம். வாரங்களில் வெள்ளியும், வியாழனும், திங்களும், புதனும் சுபம். அம்சங்களில் சுபமான பொருளுள்ளவை சுபம். மேலும் பொதுவாகக் கர்த்தாவினுடைய ஜன்ம நக்ஷத்திரத்தில் ஆரம்பித்து சுபாசுபங்களை அறிதல் வேண்டும்.

ஶிஷ்டம் த்யக்த்வா ஸமே க்ஷீணே க்ருத்யாதி ஶோதநம் விது: ।
ஸௌராத்யாராதிஸம்யுக்தம் விஶாகாதி ப்ருதக் ப்ருதக் ।
வியோகம் மரணம் நாஶமம்ருதம் யோகமிஷ்யதே ॥ ௩௰௨ ॥

கணம் ஸ்வாஸுரமாநுஷ்யம் வர்ஜயேச்ச ஶுபஸந்த்யா ।
ஏவம் ஹி ஶோதநாயார்த்தம் ஶுபகர்மாணி ஸம்யோஜயேத் ॥
௩௰௩

சு - உரை :— சேஷித்தவற்றைக் கழித்து, குறைந்தவற்றைக் கூட்டிக் கொண்டு ஆயாதி சோபனங்களைச் சொல்லவும். வாரங்களில் ஞாயிறு முதலாகவும், நக்ஷத்திரங்களில் விசாகாதியாகவும், நன்னாலாக எண்ணி வியோகமும், மரணமும், நாசமும் ஆகாது. அமிருதயோகம் சுபமாகக் கொள்ளப்பட்டது. கணங்களில் மனுஷ கணமும் அஸுர கணமும் ஒழிந்து அல்லாத கணம் சுபமாவது. ஏவம் விதமான ஆயாதிகளை சோபனர்த்தமாக யோசித்துக் கொள்ளவும். (௩௰௨-௩௰௩)

(32-33) வகுக்கும் போது மிச்சமில்லாமல் சமமாகி விட்டால் ஆயாதிகள் சுபம் என்று கொள்ள வேண்டும்.

வாரங்களில் ஞாயிறு முதலாகவும், நக்ஷத்திரங்களில் விசாகாதியாகவும், ஒன்றோடொன்று சேர்த்து நாலு நாலாக

வரிசையாக எண்ணினுல் முறையே வியோகம், மரணம், நாசம் அமிர்தம் என்ற யோகங்கள் என்று கொள்ளவேண்டும். இவைகளில் அமிர்தயோகம் சுபம். மற்றவை அசுபம். கணங்களில் மனுஷ்யகணமும் அசுரகணமும் விரும்பத்தக்கதல்ல. தேவ கணம் சுபம். இவ்விதமாக ஆயாதிகள் சுபமாக இருத்தல் வேண்டும்.

𑌇𑌤𑍍𑌯𑌾𑌗𑌸𑍍𑌤𑍍𑌯𑍇 𑌸𑌕𑌲𑌾𑌧𑌿𑌕𑌾𑌰𑍇 𑌮𑌾𑌨𑌸𑌂𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌵𑌿𑌶𑍇𑌷𑍋 𑌨𑌾𑌮
𑌪𑍍𑌰𑌥𑌮𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃

அகஸ்திய முனிவர் அருளிய ஸகளாதிகாரம் என்ற நூலில்
'அளவைகளின் வகை' என்னும் முதல் அத்தியாயம்
முற்றுப்பெற்றது.

𑌅𑌥 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

𑌉𑌤𑍍𑌤𑌮𑌦𑌶𑌤𑌾𑌲𑌪𑍁𑌰𑍁𑌷𑌮𑌾𑌨 𑌵𑌰𑍍𑌣𑌨𑌂

இரண்டாவது அத்தியாயம்

உத்தமதசதாளம் என்னும் புருஷமானம்

𑌉𑌷𑍍𑌣𑍀𑌷𑌾𑌦𑍍𑌯𑌵𑌯𑌵𑌾𑌨𑌾𑌂 𑌮𑍂𑌰𑍍𑌧𑌾𑌦𑌿𑌪𑌾𑌦𑌾𑌨𑍍𑌤𑌕𑌂 ।
𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌪𑍍𑌰𑌾𑌣𑌿𑌨𑌾𑌂 𑌚 𑌆𑌦𑍍𑌯𑌪𑌾𑌦𑌾𑌨𑍍𑌤𑌕𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥ ௱௰௪ ।

𑌤𑌦𑌂𑌶𑌂 𑌦𑍇𑌹𑌮𑌾𑌨𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌤𑌾𑌲𑌾𑌦𑌿𑌪𑍍𑌰𑌵𑌿𑌭𑌾𑌜𑌿𑌤𑍇 ।
𑌯𑌵𑌾𑌦𑍀𑌨𑍍𑌯𑌙𑍍𑌗𑌤𑌾𑌲𑌾𑌨𑍍𑌤𑌂 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌂 𑌪𑍍𑌰𑍋𑌚𑍍𑌯𑌤𑍇 ॥ ௱௰௫ ।

வர்ஷஸாரம்]

கு - உரை :—வேதம் 4, பாணம் 5, ஆக 20, அஷ்டத்வாதச 96, அஷ்டார்த்தகம் 4, ஆக நூற்றிருபத்து நாலு, இப்படியிலே பாகிக்கப் பட்ட அங்குலம் தேஹலப்தாங்குலம். அந்த அங்குலத்தில் எட்டி லொன்று 'யவை' எனப்பட்டது. இந்த அங்கும், யவை இவைகளி னாலே அங்கமானம் அளக்கப்படும். (௩௪-௩௫)

34-35. மூர்த்திகளின் உஷ்ணீஷம் முதல் பாதம் வரையில் அதாவது முடிமுதல் அடிவரையில் உள்ள உயரத்தை 124 பாகங்களாக்கினால் அதையே மூர்த்தியின் தேஹலப்தாங் குலம் என்பர். அதில் எட்டில் ஒன்று 'யவை' எனப்படும். இவ்விதமான 'அங்குலம்,' 'யவை' என்ற அளவைகளினால் மூர்த்திகளின் அங்கங்களின் அளவைகள் [1] சொல்லப்படும்.

யவத்ரயாம்ஶமுஷ்ணீஷம் தஸ்மாத்த்ரயாம்ஶகம் |
கேஶாந்தம் து ததோऽக்ஷிஸூத்ரம் ஸார்தகம் || ௩௬ ||
நாஸாபுடாவஸாநம் ச ததோ வேதாங்குலாந்தகம் |
யவத்ரயாம்ஶம் தஸ்மாத்ரயாம்ஶம் மஷ்டார்தகம் || ௩௭ ||
யவஹீநம் து வக்த்ரம் கண்டம் து யவாதிகம் |
ஹாநாம்ஶம் ஹ்ருத்ததோ நாபிநாபிமேட்ரம் ஸஷோடஶகம் || ௩௮ ||
ஸார்தம் தஸ்மாத்ததோ ஜாநு நக்ஷத்ராம்ஶம் யவாம்ஶகம் |
ஜாநுஜங்கோரு தத்துல்யம் ஸூத்ரகம் பாதம் ஜாநுஸந்தயா || ௩௯ ||

கு - உரை :—உஷ்ணீஷம் விரல் 1 யவை 3
அதுபற்றி கேசாந்தம் விரல் 3
அதுபற்றி நேத்ராந்தம் விரல் 4 யவை 3
அதுபற்றி நாஸாபுடம் விரல் 4 யவை 3

---

1. இது உத்தமதசதாளத்திலுள்ள மூர்த்திகளுக்குப் பொருந்தும். மற்ற வகைத்தாள மானத்திலுள்ள மூர்த்திகளுக்கு அவற்றிற்குரிய அங்குலத்தைத் தாளம் ஒன்றுக்கு 12 அங்குலமாகவும் உத்தமதாளத்திற்கு 4 அங்குலம் கூட்டியும், அதமதாளத்திற்கு 4 அங்குலம் குறைத்தும் கணக்குப் பார்த்து மொத்த எண்ணிக்கையினால் உயரத்தைக் கூறுசெய்து அங்குலத்தையும் யவையையும் நிச்சயிக்கவேண்டும்.

அதுபற்றி ஹந்வந்தம் விரல் 4 யவை 3
களமானது விரல் ½ அதாவது யவை 4
கண்டத்தின் நீளம் யவை குறைய விரல் நான்கு (அதாவது
விரல் 3 யவை 7)
அதுபற்றி ஹ்ருதயம் விரல் 12 யவை 11
(அதாவது விரல் 13 யவை 3)
அதுபற்றி மேட்ரமூலாந்தம் விரல் 13 யவை 3
அதில் நின்றும் தன்னிலொப்பது [illegible] அதாவது
இடுப்பிலிருந்து துடை விரல் 27
ஜானு (முழங்கால் முட்டு) விரல் 4
ஜங்கா (முழங்கால்) துடைக்கு ஸமம் அதாவது விரல் 27
பாதம் ஜானுவுக்கு ஸமம் அதாவது விரல் 4. (௩௰௬-௩௰௯)

36-39.

	அங்.		யவை.
உஷ்ணீஷம் என்னும் முடி	1	—	3
உஷ்ணீஷத்திலிருந்து கேசாந்தம் அதாவது நெற்றியின் மேல் எல்லை வரை	4	—	3
அதிலிருந்து (அக்ஷிவர்மா) கண் இமைவரை	4	—	3
மூக்கு	4	—	3
அதிலிருந்து முகவாய்க்கட்டை முடிய	4	—	3
,, கழுத்தின் நுனிவரை	0	—	4
,, கழுத்தின் அடிப்பக்கம் வரை	3	—	7
அதிலிருந்து ஹ்ருதயம் வரை	13	—	3
,, நாபி வரை	13	—	3
,, மேட்ர மூலம் அதாவது குறியின் ஆரம்பம் வரை	13	—	3
இடுப்பிலிருந்து துடை சேர்ந்தது	27	—	0
முழங்கால் சில் (ஜானு)	4	—	0
முழங்கால் (ஜங்கா)	27	—	0
பாதம்	4	—	0
	124	—	0

வாஹ்வக்ஷாந்தம்]

அங்குஷ்டாத் பார்ஷ்ணி பர்யந்தம் ஸப்ததஶாங்குலம் ।
ஹிக்காதயோ ஜத்ருஸாமாத் ஸ்தாநாத் பாஹோ: ஸப்தவிம்ஶகம் ॥ ௪௰ ॥
ஸைகவிம்ஶதி ஸாமாந்யாத் ப்ரகோஷ்டம் ப்ரோக்தமாயதம் ।
தலாந்தம் மத்யமாக்ராந்தம் த்ரயோதஶ ஸார்த்தம் ஸமாத்ருதம் ॥ ௪௰௧ ॥

சு - உரை :—பெருவிரல் முதல் குதிகால் வரையில் விரல் 17
ஹிக்கா ஸூத்ரத்தைப்பற்றி (கழுத்தின் கீழ்க்கோடு முதல்)
பாஹு (புஜம்) விரல் 27

முன் கை விரல் 21
தலமூலத்தைப்பற்றி நடுவிரல் நுனிவரையில் விரல் 13½ [1]
(௪௰-௪௰௧)

(40-41) கால் கட்டைவிரல் முதல் குதிகால் வரை நீளம் 17 அங்குலம். ஹிக்காமுதல் அதவாது நெஞ்சின் நேர்க்கோடு முதல் புஜத்தின் நீளம் 27 அங்குலம். மணிக்கட்டு வரையில் முன்னங்கையின் நீளம் 21 அங்குலம். மணிக்கட்டு முதல் நடு விரல் நுனிவரை நீளம் 13½ அங்குலம்.

ஜாநு ஜாநு நவாங்ஶம் ஸ்யாத் க்ரீவாமூலம் க்ரீவோர்த்வகம் ।
த்ரிதயம் பாஹுமூலாந்தம் அக்ஷிபம்ஶாயதாந்தகம் ॥ ௪௰௨ ॥

